## <u>விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் - இடையன்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், சின்னச்சேக்காடு மற்றும் மணலி</u>

**<u>முகவுரை:</u>**

சென்னை மாநகரின் விரிவாக்கப் பகுதிகளான இடையன்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், சின்னச்சேக்காடு மற்றும் மணலி பகுதிகளில் பகுதி-II மணலியில் 15, 16, 17, 18, 20 & 21 ஆகிய வார்டுகளும், பகுதி-III மாதவரத்தில் வார்டு 29 அடங்கிய பகுதிகளில் 56.53 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், 767 தெருக்களுடன் மொத்தம் சுமார் 178.77 கி.மீ நீளத்திற்கு குடிநீர் குழாய்களை பதிக்கும் நோக்கத்தில் திட்டம் கொண்டு வரப்பட்டது.

இடையன்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், சின்னச்சேக்காடு மற்றும் மணலி பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் திட்டப் பணிகள் ரூபாய் 80.54 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் (2013-14)-ன் கீழ் (அரசு ஆணை (எம்.எஸ்) எண்.105, நநி.ம.கு.வ.(எம்.சி.ஐ) துறை, நாள் 11.07.2013) எடுத்துக் கொள்ளப்பட்டது.

நீர் ஆதாரம் - மீஞ்சூர் (வடக்கு - சென்னை) கடல் நீர் குடிநீராக்கும் நிலையம்

**<u>பணியின் நோக்கம்:</u>**

இடையன்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், சின்னச்சேக்காடு மற்றும் மணலி ஆகிய பகுதிகளுக்கு விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் கீழ்க்காணும் திட்ட நோக்கம் உடையது:

1. 182603மீ நீளத்திற்கு 100மி.மீ முதல் 600மி.மீ விட்டமுள்ள அளவுகளில் Ductile Iron Pipe (DI) விநியோகக் குழாய்களை அமைத்தல்.
2. 8000மீ நீளத்திற்கு 200மி.மீ மற்றும் 500மி.மீ விட்டமுள்ள Ductile Iron Pipe (DI) விநியோகக் குழாய்களை அமைத்தல்.
3. துவாரகா நகர் பகுதியில்<br>மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி - 13 ல.லி (உந்து நிலையம் அமைத்தல்)
4. வடபெரும்பாக்கம் பகுதியில்<br>மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி - 2 ல.லி<br>கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி - 1 ல.லி (உந்து நிலையம் அமைத்தல்)
5. தீயம்பாக்கம் பகுதியில்<br>மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி - 3 ல.லி<br>கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி - 1 ல.லி ( உந்து நிலையம் அமைத்தல்)
6. சின்னச்சேக்காடு பகுதியில்<br>மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி - 10 ல.லி<br>கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி - 2 ல.லி (உந்து நிலையம் அமைத்தல்)
7. மணலி பகுதியில்<br>மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி - 35 ல.லி<br>கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி - 5 ல.லி (உந்து நிலையம் அமைத்தல்)
8. வீட்டு குடிநீர் இணைப்புகள் - 10036 எண்கள்

**<u>ஒப்பந்த விவரங்கள்:</u>**

இத்திட்டத்திற்கான ஒப்பந்ததாரர் திருவாளர். அபிராம் இன்ப்ரா பிரைவேட் லிமிடெட்., பெங்களூர். திட்டப்பணியின் மதிப்பு ரூ.6155.59 கோடி மதிப்பீட்டில், 04.03.2014 அன்று ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது மற்றும் திட்டத்தின் காலம் 24 மாதங்கள் ஆகும். இத்திட்டப்பணிகள் 26.05.2014 அன்று துவக்கப்பட்டது.

**<u>பணியின் முன்னேற்ற நிலை 07.03.2023:</u>**

- வடபெரும்பாக்கம் மற்றும் தீயம்பாக்கம் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.
- இடையன்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம் பகுதிகளில் தற்பொழுது வெள்ளோட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சின்னச்சேக்காடு மற்றும் மணலி பகுதிகளில் தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பணி முன்னேற்றம் - **86.33** %
- நிதி முன்னேற்றம் - **87.70** %
- மீதமுள்ள பணிகள் **31.03.2023**-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**இத்திட்டம் நிறைவேறியவுடன், 2.22 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்**


ELANDANUR
ஏலண்டனூர்
Edayanchavadi
இடையன்சாவடி
Kadaliamman Kovil,
Kanniyamman Pet
ARIYALOOR
VILLAGE
அரியலூர்
வில்லேஜ்
ஆண்டார்
குப்பம்...
Post office
MANALI
NEW TOWN
மணலி
புதிய
டவுன்
VAIKKADU
வைக்கடு
AMULLAIVOYAL
அமுல்லைவாயல்
SADAYANKUPPAM
சடயன்குப்பம்
TNEB 400KV GIS
New Substation
Sada Muneesswaran
temple
Maathur Pranel Trailers
MATHUR
மதூர்
1018
PALAVARAM
பழவரம்
BR Ambedkar Statue
1018
Workers Hospital
MANALI
மணலி
Meenakshi Theatre
மீனாட்சி
திரையரங்கம்
SEKKADU
செக்காடு
SUBRAMANI
NAGAR
சுப்ரமணி
INDIAN BANK